இந்திய அரசியலமைப்பு

பகுதி - 9

ஐக்கிய நாடுகள் அவை

1. கி.பி. 1939 முதல் கி.பி. 1945 வரை நடைப்பெற்ற இரண்டாம் உலகப் போர், முதல் உலகப் போரை விட பெரும் அழிவை ஏற்படுத்தியது.
2. இரண்டாம் உலகப் போரில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இறந்தனர்.
3. முதல் உலகப் போரின் இறுதியில் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு கலகம் உலக அமைதியை ஏற்படுத்தாத காரணத்தால் இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டது.
4. இரண்டாம் உலகப் போரின் முடிவில், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகள் உலக அமைதியை நிலைநாட்ட ஒரு புதிய அமைப்பு தேவை என்பதை உணர்ந்தனர் இதன் விளைவாக ஐக்கிய நாடுகள் அவை உருவானது.
5. ஐக்கிய நாடுகள் அவைக்கு “ஐக்கிய நாடுகள் அவை” என பெயரிட்டவர் --- அமெரிக்க முன்னாள் அதிபர், பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட்.
6. **01 – ஜனவரி, 1942 ஆம்** ஆண்டு 26 நாடுகள் சேர்ந்து ‘அட்லாண்டிக் சாசணத்தில்’ கையெழுத்திட்டன. இந்த சாசணத்தில் “ஐக்கிய நாடுகள்” என்ற பெயர் அதிகாரப்பூர்வமாக இடம்பெற்றது.
7. உலக மக்களிடையே அமைதி மற்றும் பாதுகாப்பை உருவாக்க ஏற்படுத்தப்பட்ட கொள்கை தான், **அட்லாண்டிக் சாசனம்.**
8. 1941 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் நாள் அன்று அமெரிக்க அதிபர், பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் மற்றும் இங்கிலாந்து பிரதமர் வின்சன்ட் சர்ச்சில் ஆகியோர் அட்லாண்டிக் கடலில் **‘HMS பிரின்ஸ் ஆப் வேல்ஸ்’**

என்ற கப்பலில் பயணம் செய்யும் போது இந்த சாசணத்தில் கையொப்பம் இட்டனர்.

9. ஐக்கிய நாடுகள் அவையின் சாசனத்தை எழுதுவதற்கு சான் பிரான்சிஸ்கோ நகரில் ஒரு மாநாடு ஏப்ரல், 25 – 1945 ஆம் ஆண்டு நடைபெற்றது.

10. ஐக்கிய நாடுகள் அவையின் இலக்குகள், நோக்கங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் தொகுப்பே ஐக்கிய நாடுகள் சாசணம் ஆகும்.

11. ஐக்கிய நாடுகள் சாசணத்தில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் ஜூன் 25 ஆம் நாள் 1945 ஆண்டு கையெழுத்திட்டனர். போலந்து நாடு பின்னர் கையெழுத்திட்டது.

12. அக்டோபர் 25 ஆம் நாள் 1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அவை தனது செயல்பாட்டை துவங்கியது.

13. எந்த நாள், 'ஐக்கிய அவையின் நாளாக' கொண்டாடப்படுகிறது? அக்டோபர் – 25 ஆம் நாளாகும்.

14. ஐ. நா. சபை உருவாவதற்கு முன்பு கூட்டப்பட்ட கூட்டங்கள், 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 -ல் மாஸ்கோவில் கூட்டப்பட்டது. 1943 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 -ல் பெக்ரானில் கூட்டப்பட்டது. 1944 செப்டம்பர் 21 அன்று டம்பர்டன் ஓக்ஸ் எனுமிடத்தில் கூட்டப்பட்டது. 1944 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி டம்பர்டன் ஓக்ஸ் எனுமிடத்தில் கூட்டப்பட்டது. 1945 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் நாள் அன்று யாபோல்டா எனுமிடத்தில் கூட்டப்பட்டது.

15. தற்போது ஐ.நா. வில் **193 நாடுகள்** அமைதியை விரும்பும் உறுப்பு நாடுகளாக உள்ளன.

16. ஐ.நா. வின் தலைநகரம் **நியூயார்க்** பகுதியில் அமைந்துள்ளது.

ஐ.நா. வின் இலச்சினை, கொடி, மொழிகள்

17. **5 உள்வட்டங்களும் அதன் மீது பூமியின் வடதுருவத்தின் தோற்றமும் அதனை சூழ்ந்து ஆலிவ் இலைக் கொத்துக்கள் கொண்ட படம்** ஐ.நா. வின் இலச்சினையாக உள்ளது.

18. ஐ.நா. வின் இலச்சினையில் உள்ள ஆலிவ் இலை **உலக அமைதியை** குறிக்கிறது. உலகப் படம், **உலக அமைதி மற்றும் பாதுகாப்பைக்** குறிக்கும்.

19. வெளிர் நீல நிறக்கொடியின் நடுவில் வெள்ளை நிற ஐ.நா. இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது.

20. **ஐ.நா. வின் பொது மொழிகள்** யாவை? ஆங்கிலம், பிரஞ்ச்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், சீனம், அரேபிய மொழி.

21. ஐ.நா. சபையின், **"ஆயிரம் அண்டு குறிக்கோள்"** --- மிகுதியான ஏழ்மையும், பட்டினியையும் நீக்குதல்; அனைவருக்கும் தொடக்க கல்வி அளித்தல், பாலின சமத்துவம், பெண்களுக்கு அதிகாரம் போன்றவற்றை உருவாக்குதல், குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்தல், அன்னையர் உடல் நலம் பேணுதல், எய்ட்ஸ், ஹெச்.ஐ.வி, மலேரியா போன்ற நோய்களை கலைய நடவடிக்கைகள் எடுத்தல், சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல், முன்னேற்ற பணிகளுக்காக உலகளாவிய தோழமையை உருவாக்குதல்.

22. ஐ.நா. சபை **ஆறு** முக்கிய அமைப்புகளை கொண்டது.

    1. பொதுப் பேரவை,
    2. பாதுகாப்பு பேரவை,
    3. பொருளாதார மற்றும் சமூகப் பேரவை,
    4. பன்னாட்டு நீதிமன்றம்,
    5. அறங்காவலர் பேரவை,

6. பன்னாட்டு செயலகம்.

23. ஐ.நா. சபையின் மிக முக்கியமான அமைப்பு **பொதுப் பேரவையாகும்.**

24. **“மனித இன நாடாளுமன்றம்”** என அழைக்கப்படுவது? **பொதுப் பேரவையாகும்.**

25. பொதுப் பேரவையில், அனைத்து உறுப்பு நாடுகளின், **5 பிரதிநிதிகள்** உறுப்பினர்களாக இருப்பார்கள்.

26. பொதுப் பேரவையாயில், **ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒரு ஓட்டு உண்டு.**

27. **ஆண்டுக்கு ஒரு முறை பெரும்பாலும், செப்டம்பர் மாதத்தில் பொதுக்குழு கூட்டம் நடைபெறும்.**

28. பாதுகாப்பு பேரவையின், வேண்டுகோளின் படி, தேவைக்கேற்ப அவசர கூட்டமும் நடைபேறும்.

29. முக்கிய நடவடிக்கைகளான அமைதி, பாதுகாப்பு, புதிய உறுப்பு நாடுகளைச் சேர்த்தல், வரவு செலவு திட்டங்களை நிறைவேற்றல் ஆகியவற்றிற்கு **மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை.** மற்ற தீர்மானங்களுக்கு சாதாரண பெரும்பான்மையே போதுமானது.

30. பொதுப் பேரவையின் முக்கிய செயல்பாடுகள், தலைவரையும் **21** துணைத் தலைவர்களையும் தேர்ந்தெடுத்தல். ஆண்டு வரவு செலவு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல். பாதுகாப்பு பேரவையின் பரிந்துரையின் பேரில் பொதுச்செயலர், பன்னாட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியவர்களை தேர்ந்தெடுத்தல் ஆகியனவாம்.

31. ஐ.நா. அவையின் இரண்டாவது முக்கிய அவை --- **பாதுகாப்பு அவையாகும் (பாதுகாப்பு பேரவை).**

32. ஐ.நா. வின் நிர்வாக அமைப்பாக செயல்படுவது எது? **பாதுகாப்பு பேரவை.**

33. ஐ.நா. வின் பாதுகாப்பு பேரவை, **5 நிரந்தர உறுப்பினர்களையும், 10 நிரந்தரமற்ற** உறுப்பினர்களையும் மொத்தம் **10** உறுப்பினர்களை உள்ளடக்கியது.

34. ஐ.நா. வின் பாதுகாப்பு பேரவையின், **5** நிரந்தர உறுப்பு நாடுகள் யாவை? **ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா.**

35. ஐ.நா. வின் பாதுகாப்பு பேரவையின், **10** நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் பதவிக்காலம் யாவை? **இரண்டு ஆண்டுகளாகும்**. இவர்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

36. ஐ.நா. வின் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகள் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்? **பொதுப் பேரவை.**

37. பாதுகாப்பு பேரவை உறுப்பினர்கள் மாதம் ஒரு முறை கூடி புதிய தலைவரை தேர்ந்தெடுப்பர். 2/3 உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

38. ஐ.நா. பாதுகாப்பு பேரவையில், நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு **தடுப்புரிமை ஆணை 'வேட்டோ பவர்' (VETO POWER)** உண்டு.

39. **தடுப்புரிமை ஆணை 'வேட்டோ பவர்' (VETO POWER)** யை பயன்படுத்தி ஒரு நிரந்தர உறுப்பு நாடு, எந்த ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றாமல் தடுக்க முடியும்.

40. **2010** ஆம் ஆண்டு **ஐ.நா.** சபையின் பாதுகாப்பு பேரவைக்கு நிரந்தரமற்ற உறுப்பினராக **இந்தியா** இரண்டாண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

41. ஐ.நா. சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவை, பொருளாதார மற்றும் சமூகப் சேவை செயல்பாடுகளில் ஈடுபடும். சிறப்பு நிறுவனத்தின் பணிகளை ஒருங்கினைக்கிறது.

42. ஐ.நா. சபையின் பொருளாதார மற்றும் சமூகப் பேரவை, 54 உறுப்பினர்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு 3 ஆண்டுக்குக்கும், 1/3 பங்கு உறுப்பினர்கள் பதவி விலகுவர். இப்பேரவையின் முக்கியக் கூட்டம் ஜூலை மாதம் நடைபெறும்.

43. ஐ.நா. அவையின் அறங்காவலர் தன்னாட்சி அதிகாரம் பெறாத 11 நாடுகளை நிர்வகிக்க அறங்காவலர் பேரவை அமைக்கப்பட்டது.

44. “உலக நீதிமன்றம்” என அழைக்கப்படுவது? பன்னாட்டு நீதிமன்றம்.

45. பன்னாட்டு நீதிமன்றம் --- ஐ.நா. அமைப்பின் முக்கிய நீதி அமைப்பாகும். இந்நீதிமன்றத்திற்கான 15 நீதிபதிகள் ஐ.நா. பொதுப் பேரவை மற்றும் பாதுகாப்புக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

46. உறுப்பு நாடுகளிடையே ஏற்படும் பிரச்சனைகளை பன்னாட்டு நீதிமன்றம் தீர்த்து வைக்கும்.

47. பன்னாட்டு நீதிமன்றம் **ஹாலந்து** நாட்டில் உள்ள **ஹேக்** எனுமிடத்தில் அமைந்து உள்ளது.

48. **ஐ.நா. பன்னாட்டு செயலகம்** நிர்வாகப் பணிகளை செய்கிறது. பொதுச் சபை, பாதுகாப்பு பேரவை, பன்னாட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் வழிகாட்டுதலின் படி நிர்வாக செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.

49. **ஐ.நா. பன்னாட்டு செயலகம்** ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் வழிகாட்டுதலின் படி நிர்வாகப் பணிகளை மேற்கொள்கிறது.

50. ஐ.நா. சபையின் முன்னாள் பொதுச் செயலாளர் (GENERAL SECRETARY) --- பான் – கி – மூன்.

51. ஐ.நா. சபையின் தற்போதைய பொதுச் செயலாளர் (GENERAL SECRETARY) --- அண்டானியோ கட்டர்ஸ் (போர்ச்சுகள் நாட்டின் முன்னாள் அதிபர்).

52. ஐ.நா. அவை 1946 ஆம் ஆண்டு ஈரானில் இருந்து ரஷ்யப் படைகளையும்; சிரியா, லெபனான் நாடுகளில் இருந்து பிடிட்டன், பிரான்ஸ் நாட்டு படைகளையும் திரும்பப்பெறச் செய்தது ஐ.நா. அமைப்பின் அரும் பெரும் சாதனைகளாக கருதப்படுகின்றது.

53. 1947 ஆம் ஆண்டு டச்சு நாட்டு பிடியிலிருந்து இந்தோனேஷியாவிற்கு சுதந்திரம் அளித்தது.

54. 1956 ஆம் ஆண்டு சூயஸ் கால்வாய் பிரச்சனைக்கு முடிவு செய்தது. அதனை அனைத்து நாட்டு பயன்பாட்டிற்கு பொதுவாக்கியது.

55. 1962 மற்றும் 1973 ல் நடந்த மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சனையையும், க்யூபா ஏவுகணை பிரச்சனையையும் முடிவுக்கு கொண்டு வந்தது.

56. 1988 ல் ஏற்பட்ட ஈரான் - ஈராக் போரை முடிவுக்கு கொண்டுவந்தது.

57. 1989 ல் ஆப்கானிஸ்தானில் இருந்து ரஷ்யப் படைகளை திரும்ப பெறச் செய்தது.

58. 1990 ல் குவைத் நாட்டிற்கு மேலாண்மையினை பெற்று தந்தது.

59. கம்போடியா, எல் – சால்வேடார், கவுட்டமேலான், மொசாம்பிக் போன்ற நாடுகளில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களை முடிவுக்கு கொண்டு வந்தது.

60. ஐ.நா. அவையின், உலக சுகாதார நிறுவனம் (WORLD HEALTH ORGANIZATION (WHO)) பெரியம்மையை முழுவதும் நீக்கியது. மேலும்

போலியோ, மலேரியா, காசநோய் போன்ற நோய்களை உலகத்திலிருந்து முற்றிலும் நீக்க உறுதி ஏற்று செயல்பட்டு வருகிறது.

61. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் மேலாணையர் அலுவலகம் (UNCHR) நிறுவனம் அகதிகளுக்காக ஆற்றிய சேவைகளுக்காக 1954, 1981 ஆம் ஆண்டுகளில் 'நோபள் பரிசுகளைப்' பெற்றுள்ளது.

62. "உரிமைகள் என்பன சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசாங்கத்தால் நடைமுறை படுத்தப்படுகிறது" இது யாருடைய கூற்றாகும்? பேராசிரியர். பிரஷாங்கோ.

63. ஐக்கிய நாடுகளின் 'மனித உரிமைகள் பிரகடனம்' எந்த ஆண்டு கொண்டுவரப்பட்டது? **1948**.

64. ஐ.நா. சபையின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று மனித உரிமைகளை பாதுகாத்தல், அதனை மதிப்புறச் செய்தலாகும்.

65. "அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்" 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாள் நிறைவேற்றப்பட்டது.

66. மனித உரிமைகள் தினம் --- டிசம்பர் – 10.

67. அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் – 1948, 30 சரத்துகளை உடையது. இது இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது 1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் 2 பொருளாதாரம் சமூகம் மற்றும் பன்பாட்டு உரிமைகள்.

68. வியன்னா பிரகடனம் (ஐ.நா.வின் மனித உரிமைகள் பிரகடனம்) --- 1993.

69. இந்திய அரசங்கம் ஒரு சட்டம் இயற்றி, இந்தியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கிய ஆண்டு --- 1993.

70. அனைத்து மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

71. இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாகிய நாள் மற்றும் தலைமையிடம் --- அக்டோபர் – 12, 1993; தில்லி.

72. இந்திய தேசிய மனித உரிமைகள் ஆணையம் --- ஒரு தலைவரையும், 4 உறுப்பினர்களையும் கொண்டது.

73. இந்தியாவில் தேசிய மனித உரிமைகள் ஆணையம், 1993 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 'மனித உரிமைகள்' சட்டத்தின் படி, அக்டோபர் – 12, 1993 (தில்லியில்) நிறுவப்பட்டது.

74. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நிதிபதியாக இருப்பார்.

75. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களுள் ஒருவர் உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியாவும், மற்ற இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் ஆணைய செயல் ஆனுபவம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். இவர்களை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார்.

76. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் (ஆணை) உத்தரவின் பேரில் பணி நீக்கம் செய்யப்படலாம்.

77. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர், ஐந்து ஆண்டுகளோ அல்லது 70 வயது வரையோ அப்பதவியில் நீடிக்கலாம்.

78. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் மற்ற உறுப்பினர்கள், 5 ஆண்டுகள் வரை பதவியில் நீடிக்கலாம். குடியரசுத் தலைவரின் உத்தரவின் பேரில் மறு நியமனம் செய்யப்படலாம்.

79. தேசிய மனித உரிமைகள் ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றுள்ளது.

80. தமிழ்நாட்டில், 1997 ஆம் ஆண்டு, ஏப்ரல் 17 - ஆம் நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

81. மாநில மனித உரிமைகள் ஆணையம் --- ஒரு தலைவரையும், 4 உறுப்பினர்களையும் கொண்டது.

82. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வு பெற்ற மாநில உயர்நீதிமன்ற தலைமை நிதிபதியாக இருப்பார்.

83. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர் ஒருவர் ஓய்வு பெற்ற மாநில உயர்நீதிமன்ற நிதிபதியாக இருப்பார். மற்றொரு உறுப்பினர், ஓய்வு பெற்ற மாவட்ட நிதிபதியாக இருப்பார் எஞ்சிய இரு ஸ்மிக்கவர்களாக இருக்க வேண்டும்.

84. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக, செயலர் செயல்படுகிறார். தமிழ்நாட்டிற்கான மாநில மனித உரிமைகள் ஆணையம், சென்னையில் இயங்கிவருகிறது.

85. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாநில முதலமைச்சர், மாநில உள்துறை அமைச்சர், மாநில சட்டமன்றத் தலைவர், மாநில சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர், ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார்.

86. இந்திய அரசியலமைப்பில் பகுதி – II, பகுதி – III ன் படி உத்திரவாதம் அளிக்கப்பட்ட மனித உரிமைகள் மீறப்படும்போது மனித உரிமைகள் ஆணையம் விசாரணை செய்து உரிய நிவாரணம் அளிக்கும்.

87. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை பணியாற்றலாம்.

88. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள் பதவிக்காலத்தில் முறை தவரி நடந்தால் மாநில ஆளுநர் அவர்களை பதவி நீக்கம் செய்யலாம்.

89. மாநில மனித உரிமைகள் ஆணையம் தனது அறிக்கையை ஆண்டுக்கு ஒரு முறை மாநில அரசிற்கு அனுப்பும். அதில் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் ஓராண்டு செயல்பாடுகள் மற்றும் அரசாங்கம் மனித உரிமைகளை காக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் இடம்பெறும். அரசாங்கம் இவ்ரிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

90. மனித உரிமைகளைக் காக்க, மாநில மனித உரிமைகள் ஆணையம் மாவட்டந்தோரும் **'மாவட்ட மனித உரிமைகள் நீதிமன்றங்களை'** உருவாக்கியுள்ளது. இந்நீதிமன்ற நீதிபதியாக 7 ஆண்டுகள் வழங்கறிஞராக அல்லது அரசு தரப்பு வழக்கறிஞராக பாணியாற்றியவர் நியமிக்கப்படுவர்.

91. **'இந்து விதவை மறுமணச் சட்டம்'** சட்டப்பூர்வமாக ஆக்கப்பட்டது --- **1955**.

92. **'இந்து திருமணச் சட்டம்' – 1955** ன் படி தாய், தந்தையரின் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது.

93. **'வரதட்சனை தடைச் சட்டம்' – 1961** --- வரதட்சனை வேண்டி பெண்களை துன்புருத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்.

94. தமிழக அரசு, **'இந்து திருமணச் சட்டத்தில்' – 1967** ஆம் ஆண்டில் ஒரு சிறு திருத்தம் செய்து, **'சுய மரியாதை திருமணங்களுக்கு'** சட்டப்பூர்வ அங்கீகாரம் அளித்துள்ளது.

95. தமிழக அரசு, 1997 ஆம் ஆண்டு பெண்களை கேளி செய்வதை தடுத்து தடைச் சட்டம் இயற்றியுள்ளது.

96. தமிழக அரசு, 1999 ஆம் ஆண்டு பெண்களை அநாகரீகமாக சித்தரித்து சுவரொட்டிகள் வெளியிடுவதை தடை செய்து, தடைச் சட்டம் இயற்றியுள்ளது.

97. இந்திய அரசியலமைப்புச் சட்டம், சரத்து 23, சரத்து 24 ஆகியன பெண்களின் விடுதலை பற்றிக் கூறுகின்றன.

98. குழந்தைகள் திருமண தடைச் சட்டத்திருத்தம் – 1978, பெண்களின் திருமண வயதை 15 இல் இருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயதை 18 இல் இருந்து 21 ஆகவும் உயர்த்தியது. இது குழந்தை திருமணத்தை தடை செய்கிறது.

99. 1986 இல் கொண்டுவரப்பட்ட வரதட்சனை தடைச் சட்டத்திருத்தம், வரதட்சனை வாங்குபவர், மற்றும் வரதட்சனை தொடர்பாக பெண்களை கொடுமை படுத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வழிவகை செய்தது.

100. தமிழ்நாடு அரசு, 1997 - இல் (ஈவ்டீசிங்) பெண்களை இகழ்தல் தடைச் சட்டம் இயற்றியுள்ளது. 2002 இல் உருவாக்கப்பட்ட இதன் திருத்தம், பெண்களுக்கு தொல்லை கொடுப்பதை தடை செய்துள்ளது.

101. இந்திய அரசியலமைப்பின் 73 வது மற்றும், 74 வது சட்டத்திருத்தங்கள் ஊராட்சி அமைப்புகளிலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது.

102. 1948 ஆம் ஆண்டு, **'தொழிற்கூடச் சட்டம்'** கொண்டுவரப்பட்டது.

103. 1951 ஆம் ஆண்டு, **'தோட்டச் தொழிலாளர் சட்டம்'** கொண்டுவரப்பட்டது. இது மிக முக்கியமான சட்டமாகும்.

104. 1952 ஆம் ஆண்டு, '**சுரங்கச் சட்டம்**', ஆண் – பெண் வேறுபாடின்றி சம ஊதியம் வழங்கிட வழிவகை செய்தது.

105. 1961 ஆம் ஆண்டு, பெண்களின் உடல் நலம் காக்க 'பேரு கால பயன் சட்டம்' இயற்றப்பட்டு, பேருகாலத்தில் பெண்களுக்கு முறையான ஊதியம் கிடைத்திட வழிவகை செய்தது.

106. "சர்வதேச பெண்கள் தினம்" --- மார்ச் – 8.

107. பெண்கள் உரிமையை உறுதி செய்ய, 1995 ஆம் ஆண்டு சீன தலைநகர் 'பெய்ஜிங்கில்' உலகப் பெண்கள் ஒன்று கூடி "பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளே; மனித உரிமைகள், பெண்கள் உரிமைகளே" என முழக்கமிட்டனர்.

108. ஐ.நா. சபை **1978** ஆம் ஆண்டை **'சர்வதேச பெண்கள் ஆண்டாக'** அறிவித்தது.

109. பெண்களின் நலன் காக்க, இந்திய பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம், பெண்ணுரிமை இயக்கம் ஆகியன போராடி வருகின்றன.

110. இந்திய அரசியலமைப்பு பிரிவு – 39(E) குழந்தைகள் சுதந்திரமாகவும்., ஆரோக்கியமாகவும் வாழ வழிவகை செய்கிறது.

111. பிரிவு – 45 இன் படி, அரசாங்கம் அனைத்து 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய கல்வியை உறுதி செய்கிறது.

112. 'சிறுவர்களுக்கு எதிரான அநீதிச் சட்டம்' --- 1986 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம்சிரார்கள் முறையாக பாதுகாக்கப்பட்டும், அவர்கள் திருந்தி வாழவும் வழிவகை செய்கிறது.

113. ஐ.நா. சபை எந்த ஆண்டை **‘சர்வதேச குழந்தைகள் ஆண்டாக’** அறிவித்துள்ளது? --- 1979.

Winmeen